Before the Hon'ble principal District sessense Judge Kanyakumari D-O nagercoil.

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348011

1. District : Kanyakumari PS: vigilance and Anti corruption Year: 2025 FIR No.: 11 Date: 24.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: pc act Sections பிரிவுகள்: 7 of pc act 1988 as ammended in 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 10.10.2025 at 22.00hrs Date to : 18.10.2025 at 21.30hrs and 23.10.2025 at 21.00hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2025 நேரம் 13.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2025 நேரம் 14.30hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Accused house near Layan Junction, 6k north east
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Rajan @ chanthi Rajan (b) Father's/ ~~Husband's~~ Name : Ramasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 1/1 Seven mary street North Kavalam.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Anbu Prakash, Inspector of police Vadasamani nagar police station

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. Sivasankari, Inspector Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS. Kanyakumari Town on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Rajan

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. John 24/10/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.30 hrs
dt 24.10.2025

Name: பெயர் S. John Benchamin
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police

Attachment to column No-12 of FIR in Vigilance and Anti-Corruption, Kanyakumari Detachment Cr.No-11/2025

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:- இன்று 24.10.2025 ஆம் தேதி மதியம் 01.30 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.ஜாண் பெஞ்ஜமின் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது நாகர்கோவில் வடக்குக்கோணம் செல்வின் மேரிதெரு ர்ாமசாமி மகன் R.ராஜன் @சந்தை ராஜன் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து, வாய்மொழி உத்தரவு பெற்று கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 11/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 24.10.2025 ம் தேதி மதியம் 02.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் R.ராஜன் @சந்தை ராஜன், வயது 45, S/oராமசாமி, 1/1,செல்வின் மேரிதெரு, வடக்குக்கோணம், நாகர்கோவில். 94426 29180. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புதுறை, புன்னைநகர், நாகர்கோவில். ஐயா, நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் ரியல் எஸ்டேட் மற்றும் வடசேரி சந்தையில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். நான் இந்து தமிழர் கட்சியின் கன்னியாகுமரி மாவட்ட தலைவராக இருந்து மக்களுக்கு தொண்டு செய்து வருகிறேன். எனது கட்சி அலுவலகத்தை எனது வீட்டுடன் வைத்திருக்கிறேன். 10.10.2025 அன்று மதியம் போல என்னிடம் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் என் மீது ஒரு வழக்கு பதிவு செய்திருப்பதாகவும் அது சம்பந்தமாக நேசமணிநகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.அன்புபிரகாஷ் என்பவரை இரவு 10.00 மணிக்கு லாயம் விலக்கில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று அவரை பார்க்கும்படி என்னிடம் நேசமணிநகர் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றும் திரு.சதீஷ் என்பவர் அவரது அலைபேசி எண். 8778324685 -லிருந்து என்னை தொடர்பு கொண்டு பேசினார். என்ன வழக்கு என்று தெரியாததால் அவர் கூறியபடி அன்று இரவு சுமார் 10.00 மணிக்கு ஆய்வாளர் திரு.அன்புபிரகாஷ் என்பவரை லாயம் விலக்கில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் தெங்கம்புதூரை சேர்ந்த மிக்கேல் என்பவர் கொடுத்த புகாரின்படி என்மீதும், எனது நண்பரான தெங்கம்புதூரை சேர்ந்த ரமேஷ் என்பவர் மீதும் மற்றும் சிலர் பேரில் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் 09.10.2025 அன்று ஒரு அடிபிடி கேஸ் பதிவு செய்துள்ளதாக கூறினார். அதற்கு நான் அப்படி எந்த சம்பவமும் நடக்கவில்லை அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன். அப்போது ஆய்வாளர் தனக்கும் அது தெரியும் என்றும் ஆனால் மிக்கேல் என்பவர் மாவட்ட SP அவர்களை நேரில் பார்த்து கொடுத்த புகாரின் பேரில் உன்மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் நான் தான் விசாரணை அதிகாரி என்வே வழக்கை MF

செய்துவிடுகிறேன், எனக்கு ரூ.2,00,000/- கொடு என்று கேட்டார். அப்போது நான் என்னிடம் பணம் இல்லை, நான் எந்த தவறும் செய்யவில்லை என்பது உங்களுக்கும் தெரியும் நீங்கள் தான் நீதிவழங்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் நீதி வழங்கத்தான் ரூபாய் கேட்டேன் யோசித்துவிட்டு என்னை வந்துபார் என்று கூறினார். நான் சரிஎன்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பின்னர் மறுபடியும் மேற்படி சதீஷ் என்பவர் என்னை தொடர்பு கொண்டு 18.10.2025 அன்று இரவு 09.30 மணிக்கு மேற்படி ஆய்வாளரை அவரது வீட்டிற்கு சென்று பார்க்கும் படி ஆய்வாளர் கூறியதாக சொன்னதால் நான் அன்று இரவு சுமார் 09.30 மணிக்கு மறுபடியும் ஆய்வாளரை லாயம் விலக்கில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் என்னை பார்த்து உனக்கு தான் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதுமே குற்ற வழக்குகள் உள்ளதே அதேபோல நீ எனக்கு நான் கேட்ட தொகையினை கொடுக்கவில்லை என்றால் மேலும் பல வழக்குகள் உன்மீது பதிந்து உன்மீது குண்டாஸ் போடுவேன் என்று என்னை கடினமான வார்தையால் பேசிவிட்டு 23.10.2025 அன்று இரவு 09.00 மணிக்கு பணத்துடன் தன்னை வந்து சந்திக்கும்படி கூறினார். அதன்பேரில் 23.10.2025 அன்று இரவு சுமார் 09.00 மணிக்கு காவல் ஆய்வாளரை அவரது வீட்டிற்கு சென்று சந்தித்த போது அவர் தான் கேட்ட பணம் ரூ.2,00,000/-த்தை கொண்டு வந்தியா என்று கேட்டார். நான் அதற்கு கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு இறுதியாக அவர் 24.10.2025 அன்று எனக்கு நீ ரூ.1,15,000-ம் தரவேண்டும். அதற்கு மேல் தொகையினை குறைக்க முடியாது என்று கண்டிப்புடன் கூறினார். நான் கேட்ட பணத்தை 24.10.2025 அன்று இரவு 09.00 மணிக்குள் எனது வீட்டிற்கு வந்து என்னிடம் கொடுக்கவில்லை என்றால் உம்மீதான மேற்படிவழக்கினை MF செய்யமாட்டேன் என்றும் உன்னை வேறு எதாவது வழக்குபதிவு செய்து கைது செய்து உள்ளே தள்ளிவிடுவேன் என்று மிரட்டினார். நான் வேறு வழியில்லாமல் அப்போது அவரிடம் சரி என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டில் வந்து யோசித்து பார்த்தபோது ஆய்வாளர் திரு.அன்புபிரகாஷ் என்பவருக்கு நான் செய்யாத குற்றத்திற்கு லஞ்சம் கொடுத்து வழக்கை முடிப்பதற்கு எனக்கு விருப்பமில்லாததால் என்னிடம் லஞ்சம் கேட்ட ஆய்வாளர் திரு.அன்புபிரகாஷ் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் ஆய்வாளர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,15,000/த்தை கொண்டுவந்துள்ளேன். இப்படிக்கு sd 24.10.2025.

Sir, Received the complaint on today 24/10/2025 at 13.30 hrs, Genuineness of the complaint was verified by sources and found to be genuine. The integrity of the accused was also verified by sources and found to be bad. The prima-facie for the allegation of the complainant, Since registration of Regular case is warranted. This matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Kanyakumari V&AC Cr.No.11/2025 ,u/s 7 of P.C Act, 1988 , as amended in 2018 on 24.10.2025 at 14.30 hrs. S/d. 24.10.2025(S.John Benchamin) Inspector, V&AC, Kanyakumari Detachment.

The Original FIR along with complaint is submitted before the Hon'ble Principal District and Sessions Judge Kanyakumari District at Nagercoil and sent copies of the FIR to Higher officials and one copy kept with me for investigation.

24/10/2025

Inspector of Police,
Vigilance and Anti Corrupt
Kanyakumari Detachment
@ Nagercoil